## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு பொது/சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2016/2017 (நவம்பர்/டிசெம்பர் 2019)

# OHC 2253 Cultural Tourism in Sri Lanka

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் இருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இல் இருந்து மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. "அனைத்துப் பயணங்களும் சுற்றுலா அல்ல ஆனால் அனைத்து சுற்றுலாக்களும் பயணங்களாகும்." எனும் கூற்றிற்கு இணங்க மேல்வருவனவற்றைப் பரிசீலனை செய்க.

(அ) சுற்றுலா – வரைவிலக்கணம் (03 புள்ளிகள்)
(ஆ) சுற்றுலா வகைகள் (04 புள்ளிகள்)
(இ) அநுராதபுரம் ஸ்ரீமகாபோதி விகாரையின் சிறப்பம்சங்கள் (07 புள்ளிகள்)

02. "இலங்கையின் கலாசார சுற்றுலாத்தலங்களுள் தம்புள்ள பொற்கோயில் (Golden Temple) அனைவரையும் கவரும் வகையில் காட்சியளிக்கும் சுற்றுலாத்தலமாகும்" இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை மேல்வரும் தலைப்புகளில் ஆராய்க.

(அ) அமைவிடம் (03 புள்ளிகள்)
(ஆ) சுற்றுலாப் பயணிகளை கவருவதற்கான காரணங்கள் (04 புள்ளிகள்)
(இ) சிற்பங்களும் ஓவியங்களும் (07 புள்ளிகள்)

03. "சுற்றுலாப்பயணியும் சுற்றுலா வழிகாட்டியும் சுற்றுலாவின் முக்கிய ஆதாரசுருதிகள் ஆகும்" இக்கூற்றினை அடிப்படையாகக் கொண்டு மேல்வருவனவற்றை விளக்குக.

(அ) சுற்றுலாப் பயணி (07 புள்ளிகள்)
(ஆ) சுற்றுலா வழிகாட்டியின் செயற்பாடுகள் (07 புள்ளிகள்)

## பகுதி – II

04. தெற்காசியாவில் மிகவும் உயரமாகக் காணப்படும் இலங்கையி அமைந்துள்ள தாமரைக்கோபுரம் (Lotus Tower) வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு எத்தகைய தகவல்களை வழங்கும் என்பன மதிப்பிடுக.
(24 புள்ளிக

05. "இலங்கையில் சுற்றுலாத்துறையின் வளர்ச்சியை மேம்படுத்துவதற் ஏனைய நாடுகளின் சுற்றுலாவியல் சிந்தனையூற்றக்களை நா அறியவேண்டியவர்களாக இருக்கின்றோம்." இந்த வகையி சுற்றுலாத்துறையில் விருத்திபெற்ற ஒரு நாட்டினைத் தெரிவுசெய் எவ்வாறு இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தலாம் என உமது ஆலோசனையை விபரிக்குக.
(24 புள்ளிக

06. அமெரிக்காவிலிருந்து இலங்கையில் உள்ள பிரசித்திபெற்ற ஆன்மீ தலங்களை ஆய்வு செய்யும் நோக்குடன் வரும் ஆய்வாளர் ஒருவருக் எத்தகைய கருத்துக்களைக் கொடுத்து விளக்குவீர் என்பதை மூன் தலங்களை கருத்திற்கொண்டு ~~ஆதாரங்களுடன்~~ விளக்குக.
(24 புள்ளிக

07. இலங்கையில் யுத்தத்துக்குப் பின்னரான சுற்றுலாத்துறையின் வளர் பற்றிக் கட்டுரை வரைக.
(24 புள்ளிக

*****